# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே



சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 14.11.2023 | supeedsam.com | supeedsam@gmail.com


# மயிலத்தமடு பகுதியில் அத்துமீறி குடியேறியவர்களை வெளியேறுமாறு நீதிமன்றம் உத்தரவு



மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை பகுதியில் அரச காணியில் அத்துமீறி குடியேறியவர்களை வெளியேறுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி அன்வர் சதாத் நேற்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை பகுதியில் மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான அரச காணியில் அத்துமீறி குடியேரியதாக கூறப்படும் 13 பேருக்கு எதிராக ஏறாவூர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. மகாவலி அதிகாரசபையினால் கடந்த செப்டெம்பர்

02 ஆம் பக்கத்தில்...

# தேசிய தேர்தல்களை உடனே நடத்துங்கள்

## ரணிலைக் கோருகின்றார் சம்பந்தன்



'இலங்கையில் தற்போதைய அரசின் செயற்பாடுகள் சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்துள்ளன. ஜனாதிபதி மீதும், அமைச்சர்கள் மீதும் நாட்டு மக்கள் மாத்திரமல்ல, சர்வதேசம் கூட நம்பிக்கை இழந்து வருகின்றது. எனவே, உடனடியாக நாடாளுமன்றத் தேர்தலையும், ஜனாதிபதித் தேர்தலையும் நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒத்துழைக்க வேண்டும்.'

- இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

02 ஆம் பக்கத்தில்...

# ஜனாதிபதியின் வரவு செலவுத்திட்டத்தில் தமிழ் மக்களுக்கு என்ன நன்மை?



2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி வெளியிட்ட அறிவிப்புக்களை இதில் பார்க்கலாம்.

வடக்கு கிழக்கில் வீடற்ற குடும்பங்களின் மீள்குடியேற்றத்திற்காக 2,000 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முரண்பாடுகள் முடிவுக்கு வந்து இதுவரை

02 ஆம் பக்கத்தில்...

# பொருளாதார வங்குரோத்து நிலைக்கு அதிக கடன் பெற்றமை பிரதான காரணமாகும்

கடன் வழங்கி எம்மை நசுக்கி இந்து சமூத்திரத்தின் மூலோபாய நன்மைகளை பெற்றுக்கொள்ளவே மேற்கத் தேய நாடுகள் முயற்சிக்கின்றன.

இந்த கடன்கள் மூலம் அபிவிருத்தி செய்ய சந்தர்ப்பம் கிடைத்த போதிலும் அவ்வாறான ஒன்று தேவையில்லை. இதுவும் பொருளாதார வங்குரோத்து நிலைக்கு மற்றொரு காரணம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச கொள்கைகளை உருவாக்கும் போது இது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் சர்வதேச அரங்கில் எமது கோட்பாடு

02 ஆம் பக்கத்தில்...

# கனடாவை தொடர்ந்தும் தாக்கிப் பேசும் அலி சப்ரி

கனடா மீதான தனது எதிர்ப்பையும், மனித உரிமைகள் மீதான அந்நாட்டின் இரட்டை நிலைப்பாட்டையும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வெளிப்படுத்தியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# காணாமற் போனோரின் உறவினர்களுக்கு இழப்பீடு!

வடக்கு மற்றும் கிழக்கில் காணாமற் போனவர்களுக்கான இழப்பீடை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இதற்காக மேலும்1000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்து உரையாற்றிய போதே ஜனாதிபதி

02 ஆம் பக்கத்தில்...

# வரவு- செலவுத்திட்ட முன்மொழிவு மூலம் நாடு மேலும் நெருக்கடியை எதிர்கொள்ளும்



2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவானது கடனைப் பெறுதல் மற்றும் அரச சொத்துக்களை விற்பனை செய்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# வரவு செலவு திட்டத்தில் முன்வைக்கப்பட்ட பல விடயங்கள் கடந்த முறை பிரேரணைகளே



இவ்வருட வரவு செலவு திட்டத்தில் முன்வைக்கப்பட்ட பல விடயங்கள் கடந்த முறை வரவு செலவு திட்டத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணைகளே என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சராக நேற்று

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO



Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com

finma :34598 | 25605: cicero

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# சஹாரா பவுண்டேன் மூலம் முள்ளிப்போத்தானை மத்திய கல்லூரிக்கு கதிரைகள் அன்பளிப்பு







**(ஹஸ்பர்)**

கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரியின் அதிபர் எம். மன்சூர் அலி அவர்களின் வேண்டுகோளுக்கமைவாக ராபிதா நளீமிய்யீன் பழைய மாணவர் அமைப்பு திருகோணமலை மாவட்ட பிராந்திய கிளை ஏற்பாட்டில் சஹாரா பவுண்டேஷன் (Zahara Foundation) அனுசரனையுடன் தி/கிண்/ முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரியின் பிரதான கேட்போர்கூடத்தின் பாவனைக்கு ஒரு தொகை கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரியின் அதிபர் எம். மன்சூர் அலி அவர்களின் தலைமையில் (12) இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ. நசூஹர்கான் (நளீமி), அவர்களும் விசேட அதிதியாக முள்ளிப்பொத்தானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.கே.நசூர் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுச் செயலாளர் முன்னால் பிரதேச சபை உறுப்பினர் எம்.ஐ. றிகாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும், இந்நிகழ்வில் ராபிதா நளீமிய்யீன் பழைய மாணவர் அமைப்பின் திருகோணமலை மாவட்ட பிராந்திய கிளை தலைவர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம். தாரிக் (நளீமி), அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் (நளீமி), அஷ்ஷெய்க் ஏ.ஆர். சஜீத் (நளீமி), அஷ்ஷெய்க் ஏ.ஜீ.எம். பஹீ (நளீமி), அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். அஸ்மீர் (நளீமி), அஷ்ஷெய்க் எம்.யூ. இம்தியாஸ் (நளீமி), அஷ்ஷெய்க் எம்.கே. இஹ்ஸான் (நளீமி) மற்றும் ஆசிரியர் எச்.எம்.ஹனீஸ் ஆகியோர் கலந்துசிறப்பித்தனர். சஹாரா பவுண்டேஷன் (Zahara Foundation) பணிப்பாளர் Al Haj Fazul Jiffry அவர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பாகவும் ராபிதா நளீமிய்யீன் பழைய மாணவர் அமைப்பு திருகோணமலை மாவட்ட பிராந்திய கிளை சார்பாகவும் நன்றிகளையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# மன்னாரில் சுனாமி ஒத்திகை நிகழ்வு எவரும் அச்சமடைய வேண்டாம் பிரதேச செயலகம் தெரிவிப்பு

**( வாஸ் கூஞ்ஞ)**

திடீரென ஏற்படும் சுனாமிப் பேரழிவில் இருந்து எவ்வாறு மாணவர்களும்இ பொது மக்களும்இ தப்பித்துக் கொள்வது என்ற வழிப்புணர்வு முன்னேற்பாட்டுஇ நடவடிக்கை செவ்வாய் கிழமை (14) மன்னார்தாழ்வுபாடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெற உள்ளது

மன்னார் பிரதேச செயலகமும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் பல திணைக்களங்கள் ஒருங்கிணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது

இந்த நிகழ்வானது கடற்கரையை அண்டிய பிரதேசமாக காணப்படும் தாழ்வுபாடு



சென் ஜோசப் வித்தியாலயத்தில் செவ்வாய் கிழமை காலை 10.மணி தொடக்கம் 11.மணிலரையில் இடம்பெற உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது

மேலும் முப்படையினர் பாடசாலை மாணவர்கள் பெற்றோர்களும் இணைந்து பெரிய அளவில் இந்த சுனாமி ஒத்திகை நிகழ்வு இடம்பெற உள்ளது அதனால் இந்த ஒத்திகை நிகழ்வு தகவல்களை அறிந்திராத பொதுமக்கள் எவரும் அச்சமடையத் தேவையில்லை என்று மன்னார் பிரதேச செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவும் தெரிவித்துள்ளது



## காணாமற் போனோரின் உறவினர்களுக்கு....

ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது யாழ்ப்பாணம் பூநகரி நகர் அபிவிருத்திக்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், , யாழ்ப்பாணத்தில் நிலவும் தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கான அடிப்படை பணிகளுக்காக 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் குடிநீர் பிரச்சினைக்கு 2024 ஆண்டின் முதல் காலாண்டுக்குள் நிரந்தர தீர்வு வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

## வரவு- செலவுத்திட்ட முன்மொழிவு மூலம்...

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட முன்மொழிவு நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலே தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட முன்மொழிவு மூலம் நாட்டை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுவதை அரசாங்கம் தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஆரம்பத்தில் முன்மொழியப்பட்ட தொகையை விட மேலும் 3400 பில்லியன் ரூபாவினால் கடன் பெற்றுக்கொள்ளும் வரம்பை அரசாங்கம் அதிகரித்துள்ளதாக அனுரகுமார சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் நிலவும் நெருக்கடிக்கு புதிய தீர்வுகளை வழங்குவதற்கு பதிலாக, ஜனாதிபதி மற்றும் அவரது அரசாங்கம் தமது பழைய மற்றும் தோல்வியுற்ற நடவடிக்கைகளை மீண்டும் முன்மொழிந்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் வரவு செலவுத்திட்டத்தில்...

மீள்குடியேற்றம் செய்யப்படாத இடங்களுக்காக 2000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படவுள்ளதாக கூறினார்.

மேலும் நன்னீர் மீன்பிடித் தொழிலின் அபிவிருத்திக்காக 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படவுள்ளது என்றும் யாழ்ப்பாணத்தில் நிலவும் நன்னீர் பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதாகவும் கூறியுள்ளார்.

அதன்படி அதன் அடிப்படை பணிகளுக்காக 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேநேரம் யாழ்ப்பாணத்தை உள்ளடக்கி புதிய முதலீட்டு வலயம் நிறுவப்படவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், திருகோணமலை, பிங்கிரிய , கண்டி ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு புதிய முதலீட்டு வலயங்களை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் வடக்கு கடற்றொழிலாளர்களின் வருமானத்தை அதிகரிக்க தனியார் துறையுடன் இணைந்ததாக திட்டமொன்றை அறிமுகப்படுத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேவேளை மாகாண கடற்றொழில் சபைகள் ஸ்தாபிக்கப்படவுள்ளன என்றும் அரச மற்றும் தனியார் துறை சார்ந்த ஒன்றிணைந்த வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அறிவித்தார்.

மேலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க 1500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

விவசாய , மீன்பிடித்துறைகளை மேம்படுத்த விசேட திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் இதற்காக 2500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அறிவித்தார்.

பயிரிடப்படாத உலர் வலய காணிகளில் வேறு பயிர்ச்செய்கை மேற்கொள்ளவும் அதற்காக அரச காணிகளில் 300 ஏக்கர் ஒதுக்கவும் சட்டத்திருத்தம் மேற்கொள்ளவும் தீர்மானித்துள்ளதாக அறிவித்தார்.

மீன்பிடித்துறை மேம்பாட்டிற்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் நன்னீர் மீன் வளர்ப்பு மேம்பாட்டிற்கு 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

பால்பண்ணையாளர்களுக்கு விசேட கடன் திட்டங்கள் வழங்கப்படும் என்றும் கட்டிட நிர்மாணத்துறைக்கு விசேட திட்டங்களும் அவர்களுக்கு அரச காணிகளை வழங்க திட்டமிட்டுள்ளதாக கூறினார். துறைமுகங்களை அபிவிருத்தி செய்யவும் அதில் திருகோணமலை துறைமுக அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் எதிர்காலத்தில் பல்கலைக்கழகத்தை உருவாக்குவோம் என்றும் பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமையும் இதற்கு ஆரம்பகட்டமாக 4 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும் என்றும் கூறினார்.

மேலும் மலையக பகுதியில் கிராமிய அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கவும் இதற்காக 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும் என்றும் அறிவித்தார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாணங்களுக்கு பல்கலைக்கழகங்களை ஸ்தாபிக்க முடியும் என்பதனால் இந்த ஒழுங்குமுறை எதிர்வரும் ஆண்டு முதல் செயற்படுத்தப்படும் என கூறினார்.

## வரவு செலவு திட்டத்தில் முன்வைக்கப்பட்ட பல விடயங்கள் ....

பிற்பகல் தனது வரவு செலவுத் திட்ட உரையை சமர்ப்பித்த பின்னர் பாராளுமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

அதைப் பார்க்கும்போது பல விடயங்களை கடந்த வரவு செலவு திட்டத்திலும் அவர் முன்வைத்துள்ளார்.

அவை நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிகிறது. அதனால் மீண்டும் முன்வைத்துள்ளார். ஒரே விடயம் இரண்டு முறை கூறப்படுகிறதெனின், அந்த விடயம் அடிமட்ட அளவில் நடைமுறையில் நிறைவேற்றப்பட்டதா? இல்லையா? என்ற கேள்வி எங்களுக்கு உள்ளது.

எனவே இவ்வருட வரவுசெலவுத் திட்டமும் அதுபோன்ற பேச்சுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டமாக இருக்குமா என்பது தொடர்பில் காத்திருக்கிறோம்.

எதிர்வரும் காலங்களில் இதை ஆய்வு செய்து, பாராளுமன்ற விவாதத்தில் எங்களது யோசனைகளை முன்வைப்போம். ஜனாதிபதி ஏற்றுக்கொள்வாரா என்பதை பார்ப்போம்.

மொட்டுக் கட்சியின் ஆட்சி காலத்தில் நிதியமைச்சராக இருந்து அவர் வந்துள்ளார்.

அப்படியானால், வரவு செலவு திட்டங்களில் எங்கள் கொள்கைகள் இருக்க வேண்டும்.

வேடிக்கை கதைகள் பயனற்றவை. அவை நடைமுறையில் செயல்படுத்தப்படாவிட்டால். என தெரிவித்துள்ளார்.

## கனடாவை தொடர்ந்தும் தாக்கிப் பேசும் அலி சப்ரி

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் கனடா உண்மையான அக்கறை காட்டவில்லை எனவும் மாறாக வாக்கு வங்கி அரசியலில் மட்டுமே கவனம் செலுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது சமூக வலைதள பக்கத்தில் விடுத்துள்ள பதிவொன்றில் அவர் இதனை கூறியுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கு ஜெருசலேம் உட்பட ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசத்திலும், ஆக்கிரமிக்கப்பட்ட சிரிய கோலானிலும் குடியேற்ற நடவடிக்கைகளைக் கண்டிக்கும் ஐ.நா தீர்மானத்திற்கு எதிராக கனடா வாக்களித்ததை தனது சமீபத்திய வலைதள பதிவில் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார். கனடா எப்படி வாக்களித்தது என்று பாருங்கள் , பாசாங்குத்தனமான இரட்டைத் தரத்தைப் பார்க்கிறீர்களா?, அவர்கள் இலங்கையில் மனித உரிமைகள் மீது உண்மையான அக்கறை கொண்டவர்கள் என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் துரதிர்ஷ்டவசமாக தவறாக நினைக்கிறீர்கள்! எல்லா வழிகளிலும் வாக்கு வங்கி அரசியல்தான்! என அவர் குறிப்பிட்டுள்ளார். ஐ.நா தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த 145 நாடுகளில் இந்தியாவும் அடங்கும். நவம்பர் ஒன்பதாம் திகதி குறித்த தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய தேர்தல்களை உடனே நடத்துங்கள்

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'ஜனாதிபதி முக்கிய கருமங்களில் தான் நினைத்த மாதிரி பிடிவாதமாகச் செயற்படுகின்றார். அமைச்சர்களும் தாங்கள் நினைத்த மாதிரி வெவ்வேறு திசைகளில் பயணிக்கின்றார்கள்.

நாட்டு மக்கள் தொடர்பில் இவர்களுக்குத் துளியளவும் அக்கறை இல்லை. சுயலாப அரசியலே இவர்களின் நோக்கமாக உள்ளது. இது நாட்டின் முன்னேற்றத்துக்கு உகந்தது அல்ல. எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கமைய உடனடியாகத் தேசிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். தளம்பல் இல்லாத நிலையான ஆட்சி வேண்டும்'– என்றார்.

## பொருளாதார வங்குரோத்து நிலைக்கு அதிக

களுக்கு அமைய ஆற்றல் மிக்க அடையாளத்தை உருவாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

எம்மை நசுக்கி, இல்லாமல் செய்து இந்து சமூத்திரத்தின் மூலோபாய நன்மைகளை பெற்றுக் கொள்ளவே மேற்கத்தைய நாடுகள் முயற்சிக்கின்றன. தற்போது அந்த நாடுகள் பயன்படுத்தும் மூலோபாயங்கள் முன்னரை விட வேறுபட்டவை. இன்று அவற்றை ஆக்கிரமிப்பு என கூறுவது இல்லை. அதனை கடன் வழங்குதல் என குறிப்பிடுகின்றனர்.

இரு நிபந்தனைகளுடன் கடன்கள் வழங்கப்படுகின்றன. இந்த நிபந்தனைகள் இலகுவானதாக இருந்த போதிலும் அதனால் நாம் பொருளாதார ரீதியாக நசுக்கப்படுகின்றோம்.

அதற்கு மற்றுமொரு பெயரே அபிவிருத்திக்கான முதலீடு. அபிவிருத்திக்கான முதலீடுகள் இரண்டு வகைப்படும். ஒன்று மிகவும் தாராளமானவர்கள். இந்த தாராளமானவர்கள் அபிவிருத்திக்கு அதிக கடன்களை வழங்கி நாட்டை மேம்படுத்த உதவுகின்றனர். மற்றைய பிரிவினர் எமக்கு தேவையான நிதியை கோரிய உடனேயே வழங்குபவர்கள்.

இந்த கடனுக்கு அதிக வட்டி வீதம் அறவிடப்படுகிறது. இதன் மூலம் அனைத்தையும் அபிவிருத்தி செய்ய சந்தர்ப்பம் கிடைத்த போதிலும் அவ்வாறான ஒன்று தேவையில்லை. இதுவே பொருளாதார வங்குரோத்து நிலைக்கு மற்றொரு காரணமாகும்.

எமது சர்வதேச கொள்கைகளை உருவாக்கும் போது இது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். சர்வதேச அரங்கில் எமது கோட்பாடுகளுக்கு அமைய ஆற்றல் மிக்க அடையாளத்தை உருவாக்க வேண்டும்.

தேசிய வளங்களையும், பொருளாதாரத்தையும் பாதுகாக்க வேண்டும்.எமது கலாசார பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டும் என்றார்.

## மயிலத்தமடு பகுதியில் அத்துமீறி குடியேறியவர்களை

மாதம் 22 ஆம் திகதி இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையிலேயே ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதனிடையே, மயிலத்தமடு மாதவனை பகுதியில் அத்துமீறி குடியேறிய பயிர்ச்செய்கையாளர்களை வெளியேற்றுமாறு கோரி அந்தப் பகுதி கால்நடை பண்ணையாளர்களினால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் 60 ஆவது நாளாக இன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## மட்டு மேச்சல்தரை மயிலத்தமடு பகுதியில் சட்டவிரோத குடியேற்றவாசிகளை உடன் வெளியேறுமாறு நீதிமன்றம் தீர்ப்பளிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மேச்சல் தரை பகுதியான மயிலத்தமடு மாதவனை பகுதி அரசகாணியில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை உடனடியாக வெளியேறுமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் அன்வர் சதாக் திங்கட்கிழமை(13) உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள குறித்த அரசகாணியில் சட்டவிரோதமாக சிங்கள மக்கள் குடியேறியுள்ளவர்கள் வெளியேறதா நிலையில் அவர்களுக்கு எதிராக மாகாவலி அதிகாரசபையின் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இதனையடுத்து வழக்கு விசாரணை இடம் பெற்றுவந்த நிலையில் அந்த சட்டவிரோத குடியேற்றவாசிகள்சார்பில் ஆஜரான சட்டத்தரணி யுத்தத்திற்கு முன்னர் 12 சிங்கள குடும்பங்கள் குடியேறி வாழ்ந்து வந்ததாக முன் வைத்தார்.

சட்டவிரோத குடியேற்ற வாசிகள் அந்த பகுதியில் வாழ்ந்ததற்கான சட்டரீதியான ஆவணங்களை கடந்த 10 ம் திகதி வழங்குமாறு நீதவான் கால அவகாசம் வழங்கிய நிலையில் அவர்கள் அதற்கான ஆதாரத்தை வழங்காத நிலையில்; இன்று 13 ம் திகதி குறித்த வழக்கு தொடர்பான தீர்ப்பு வழங்கப்படும் என அறிவித்தார்.

இந்த நிலையில் சட்டவிரோத குடியேற்ற வாசிகளை அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் அன்வர் சதாக் தீர்ப்பளித்து கட்டளையிட்டார்.

இதேவேளை குறித்த பகுதியில் சட்டவிரோத குடியேற்றவாசிகளை வெளியேற்றுமாறு பண்ணையாளர்கள் இன்று 60 நாளாக தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது .

## வாழைச்சேனையில் பல்சமய சிறுவர் கழகம்





(க.ருத்திரன்)

சிறுவர்களின் ஆளுமை விருத்தி மற்றும் உடல், உள,ஆரோக்கியத்தை வலுப்படுத்தும் முகமாக 'பல்சமய சிறுவர் கழகம்' திறந்து வைக்கப்பட்டது.

யூனியன் கொலனி வாழைச்சேனையில் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் அனுசரணையில் தீபாவளி தினத்தினை முன்னிட்டு இன்று சர்வமத பிரார்த்தனைகளுடன் வைவபரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை மெதடிஸ்த திருட்சபை வாழைச்சேனை சேகரத்தின் முகாமைக் குரு அருட் கலாநிதி கே.எஸ்.நிசாந்தன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அதிதிகள் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு 'பல்சமய சிறுவர் கழகம்' வைபவ ரீதியாக திறந்து வைக்கப்;பட்டது.

மங்களவிளக்கேற்றலை தொடர்ந்து தமிழ் பண்பாட்டுடன் பால் பொங்க வைக்கப்பட்டு நிகழ்வுகள் யாவும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த சிறுவர் கழகத்தில் நூலகம்,விளையாட்டு நிகழ்வுகள்,பொழுதுபோக்கு வசதிகள்.போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வுகள்,சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு,கலை பண்பாட்டு ரீதியான விடயங்கள் என்பன நடைபெறும் நிலையமாக அமையும்.

அத்துடன் சிறுவர்களை உடல்,உள ஆரோக்கியத்தில் வலுப்படுத்துவது சமயங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துல் அனைத்து சமயங்களின் விழுமியங்களை அறிந்து கொள்ளவும்,இவ் பல் சமய சிறுவர் கழகம் பயன்படும்.நிகழ்வில் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.மாணவர்களின்கலை நிகழ்சிகள் என்பன நடைபெற்றன.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தேசிய கிறிஸ்த்தவ மன்றத்தின் பொதுச் செயலாளர் அருட்பணி சுஜிதர் சிவநாயகம்,இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்ற பணியாளர் எம்.எஸ்.சன்றா,மௌலவி ஏ.ஏ.எம்.ஜமீல்,அங்கிலிக்கன் திருட்சபை அருட்பணி நே.சபிலாஸ்,மெதடிஸ்தவ திருச்சபை குருவானர் அருட்பணி வி.உதயகமார், கிராமசேவகர் ஜெ.லோபனராஜ் ஆகியோர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர். நிகழ்வில் திருட்சபையின் மக்கள், சிறுவர்கள் சமய வேறுபாடின்றி கலந்து கொண்டனர்.

## அம்பாறை மாவட்ட 34வது இளைஞர் விளையாட்டு விழா அட்டாளைச்சேனையில் இடம்பெற்றது





(எம்.ஏ.ஏ.அக்தார்)

இளைஞர்விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்டத்தினது 34ஆவது மாவட்ட மட்ட இளைஞர் விளையாட்டுப் போட்டி அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் ஒத்துழைப்புடனும் சுவட்டு மைதான நிகழ்ச்சிகளாக நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலகங்களில் நடத்தப்பட்ட பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று முதலாம் இடத்தைப் பெற்ற விளையாட்டு வீர, வீராங்கனைகளின் பங்கேற்புடன் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது .

இந் நிகழ்வின் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்து சிறப்பித்தார்.

மேலும் இப்போட்டியில் வெற்றி பெற்று, முதலாம் இடங்களைப் பெறும் இளைஞர் கழக விளையாட்டு வீர, வீராங்கனைகள் 34 வது தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மறுசுழற்சி நிலையம் தோடர்பில் ஆராய்வு



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மறுசுழற்சி நிலையம் தொடர்பில் அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டபிள்யூ.டீ.வீரசிங்க ஆராய்ந்துள்ளார்.

அம்பாறை பிரதிப் பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜய ஸ்ரீ அழைப்பின் பேரில் இன்று அப்பகுதிக்கு விஜயம் செய்த அவர் குறித்த மறுசுழற்சி நிலையம் தொடர்பில் விரிவாக ஆராய்ந்தார்.

இதன் போது பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம, உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், முப்படை அதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தகர்கள் , அரச உத்தியோகத்தர்கள் ,எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது அப்பகுதியில் மலைபோல் குவிந்துள்ள குறித்த குப்பைகளை யானைகள் தினமும் உண்ண வருகின்ற நிலை ,இவ்வாறு வரும் யானைகள் சில அருகில் உள்ள பொது மக்களின் சொத்துக்களுக்கும் சேதங்களை விளைவிப்பதனால் ஏற்படும் நிலைமை, இதனை கட்டுப்படுத்த யானை வேலிகள் அமைப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கை ஆராயப்பட்டதுடன் இது தவிர நகர சபையின் திண்மக்கழிவகற்றல் முகாமுத்துவத்தை மேம்படுத்துவதற்கான பொறிமுறைத் திட்டங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து குறித்த பகுதியில் திண்மக்கழிவு கொட்டும் இடத்தில் ஒரு நிறுவனம் இயற்கை பசளை தயாரிப்பதற்காக அங்கு பொருத்தப்பட்டுள்ள பாரிய இயந்திரத்தின் மூலம் உரத்தை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நிலைமை குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

இலங்கையின் பெருமளவான காட்டு யானைகள் குப்பை மேடுகளை தேடி உணவுக்காக வருகின்றன. தாவர உண்ணியான காட்டு யானைகள், குப்பைகள் ,பொலீத்தீன்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் உள்ளிட்ட கழிவு பொருட்களை உட்கொள்வதனால் யானைகளின் இறப்பு வீதம் அதிகரித்து வருகின்றது. யானை நாளொன்றுக்கு சுமார் 150 கிலோ உணவை உட்கொள்வதாகவும் 160 லீட்டர் தண்ணீரையும் குடிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை நகரில் இருந்து குப்பைகள் வாகனங்கள் மூலம் தினமும் கொண்டுவரப்பட்டு கொட்டப்படுகின்றதுடன் மலை போல் குவிந்துள்ள குறித்த குப்பைகளை யானைகள் தினமும் உண்ண வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தனியன் யானை ஒன்று அட்டகாசத்தில் ஈடுபட்டதை அடுத்து காட்டிற்கு துரத்தி அடிக்கும் முயற்சி

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மறுசுழற்சி நிலையத்திற்கு அருகாமையில் தனியன் யானை ஒன்று அட்டகாசத்தில் ஈடுபட்டதை அடுத்து வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த யானையை மீண்டும் காட்டிற்கு துரத்தி அடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.



இன்று குறித்த கழிவு கொட்டும் இடத்திற்கு வந்த தனியன் யானை வீதிகளில் செல்வோரை அச்சுறுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தது.

இதனை அடுத்து அப்பகுதிக்கு தகவல் அறிந்து செயற்பட்ட அதிகாரிகள் யானையை அவ்விடத்தில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கையில் துரிதமாக ஈடுபட்டிருந்தனர்.

அண்மைக்காலங்களில் யானை - மனித மோதலால் யானைகளும் மனித உயிர்களும் இழக்கின்ற சந்தர்ப்பங்கள் சடுதியாக அதிகரித்துள்ளன. அத்துடன் யானை - மனித மோதலால் அதிகளவான மனித உயிரிழப்புக்கள் இடம்பெறும் நாடுகளில் இரண்டாவதாக இலங்கை காணப்படுகிறது.

யானை - மனித மோதலை குறைப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் அவற்றை முறையாக அமுல்படுத்தப்படாமை மற்றும் மேற்பார்வை செய்யப்படாமை காரணமாக யானை - மனித மோதலின் இழப்புக்களை குறைப்பது இன்று வரையும் முடியால் உள்ளமை வெளிப்படையாகும்.

இதனால் குறித்த மோதலினால் யானைகளும் மனிதர்களும் தொடர்ச்சியாக மரணித்து வருகின்றனர். எனவே மனிதன் மற்றும் யானைகளை காப்பாற்றவும் சொத்துக்களை பாதுகாக்கவும் உடனடியாக தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்

இவ்வாறு தொடர்ச்சியாக யானை மற்றும் மனித மரணங்கள் நிகழ்ந்து வந்தாலும் அவற்றினை நிவர்த்திப்பதற்கு அல்லது குறைப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

## இலங்கை இராணுவ ஊடகப் பிரிவால் அம்பாறை மாவட்ட தமிழ், சிங்கள மொழி ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு





இலங்கை இராணுவத்தின் 24 வது படைப்பிரிவு மற்றும் இளைஞர் தன்னார்வக் குழு என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த அம்பாறை மாவட்டத்தின் தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலமான ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு 24 வது இராணுவ படைப்பிரிவின் அம்பாறை மல்வத்தை தலைமை அலுவலகத்தில் (11) நடைபெற்றது.

இலங்கை இராணுவத்தின் 24வது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி தலைமையில் நடைபெற்ற இந்த செயலமர்வில் இலங்கை இராணுவத்தின் ஊடக ஆலோசகர் டி.பி.சிசிர குமார விஜயசிங்க வளவாளராக கலந்து கொண்டு விளக்கமளித்தார். இதன்போது ஊடகவியலாளர்கள் இராணுவத்தினருடன் இணைந்து செயல்படுத்த வேண்டிய விடயங்கள், பொதுமக்கள் சமூக ஊடகத்தைப் பயன்படுத்தும் முறைகள், உண்மைத் தன்மையான செய்திகளை பொது மக்களுக்கு கொண்டு செல்ல வேண்டியதன் அவசியம் மற்றும் ஊடகவியலாளர்களின் கடமைகளும் பொறுப்புக்களும் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.

கிழக்கில் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து கேட்டறிந்து கொண்டதுடன் கலந்து கொண்டவர்களுக்கு இராணுவத்தினரால் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன. இதில் இளைஞர்தன்னார்வக்குழு ஸ்தாபகர்நாசிறூன்சுலைமான், இராணுவ ஊடகப் பிரிவில் கடமையாற்றும் அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

# ௨௦௨௪ ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில்

(வாஸ் கூஞ்ஞ)

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கஇ தடம் புரண்டிருந்த இலங்கையின் பொருளாதாரத்தை கடந்த வருடத்தில் மீண்டும் சரியான பாதையில் தூக்கி நிறுத்த முடிந்ததாகவும்இ அதற்காக மக்கள் கடுமையாக உழைத்த போதும்இ சில தரப்பினர் நாட்டை பின்நோக்கி இழுக்க முயற்சித்ததாகவும் குறிப்பிட்டார்.

கற்பனைக் கதைகளால் நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது எனவும்இ நீண்ட காலமாக அரசியல் கட்சிகள் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளின் இறுதி முடிவுஇ நாட்டை வங்குரோத்து அடையச் செய்ததாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதிஇ துரதிஷ்டவசமாக நாட்டில் உள்ள சில தரப்பினர் இதனை இன்னும் புரிந்து கொள்ளவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

இதுவரையான பயணத்தின் வெற்றிக்கு அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டமே காரணம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதிஇ அதன் ஊடாக 2022 ஆம் ஆண்டைப் போன்று பொருளாதார நரகத்தில் வீழ்ந்துவிடாமல் முன்நோக்கிச் செல்வதற்கு அடித்தளமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் நட்டத்தை ஈடுசெய்யஇ அரச வங்கிகளில் தொடர்ச்சியாக கடன்களைப் பெற்று வருவதாக குறிப்பிட்ட ஜனாதிபதிஇ இந்த நிலைமையினால் அந்த வங்கிகள் பலவீனமடைந்து வீழ்ச்சியடைவதைத் தடுக்க மக்களின் வரிகளைப் பயன்படுத்த அரசுக்கு நேரிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாரிய அளவிலான குறைந்த செலவில் புதுப்பிக்கத்தக்க வலு சக்தியை பிரதான கட்டமைப்புடன் இணைப்பதற்குத் தேவையான அனைத்து சட்ட ரீதியான தடைகளும் நீக்கப்பட்டுள்ளதாகவும்இ செயல்திறனற்ற மின்சார சபையை வினைத்திறன்மிக்க நிறுவனமாக மறுசீரமைப்பதற்கான ஒழுங்குவிதிகள் தற்போது வகுக்கப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அரச துறையின் மாதாந்த சம்பளத்திற்காக 93 பில்லியன் ரூபாஇ காப்புறுதிஇ மருந்துகள்இ ஓய்வூதியம் உட்பட பொதுநல செலவுகளுக்கு 30 பில்லியன் ரூபாஇ கடன் வட்டி செலுத்த 220 பில்லியன் ரூபா என 03 பிரதான செலவுகளுக்காக மாத்திரம் அரசாங்கம் ஒவ்வொரு மாதமும் 383 பில்லியன் ரூபாவை செலவிடுவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

2021 ஆம் ஆண்டுக்குள் 900 பில்லியன் ரூபாவாக இருந்த வங்கி மிகைப்பற்றுஇ 70 பில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாகஇ 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அரச வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10மூ இலிருந்து 15மூ ஆக அதிகரிக்காவிட்டால் நாடு மீண்டும் பொருளாதார வீழ்ச்சியை சந்திக்கும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதிஇ ஒரு சில குழுக்களின் எளிய மற்றும் அழகான வாக்குறுதிகளால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது எனவும் தெரிவித்தார்.

இந்த நாட்டில் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல் மற்றும் பொருளாதாரக் கருத்தியல்கள் தோல்வியடைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதிஇ அரசியல் முறைமையையும்இ பொருளாதார முறைமையையும் முற்றாக மாற்றியமைத்துஇ புதிய கோணத்தில் பார்க்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

கடந்த கால அனுபவங்கள்இ உலகளாவிய போக்குகள் மற்றும் எதிர்கால சவால்கள் அனைத்தையும் கருத்தில் கொண்டு எமக்குரிய தனித்துவமான பொருளாதார மற்றும் அரசியல் முறைமையை நாம் உருவாக்க வேண்டும் என்றுஇ 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டில் இலங்கையின் முதன்மை வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.7மூ ஆக இருந்த போதிலும்இ 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இலங்கையின் முதன்மை வரவு செலவுத் திட்டத்தில் மேலதிகத்தை உருவாக்க முடிந்ததாகஇ 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி தெரிவித்தார்.

2022 செப்டெம்பர் மாதத்தில் 70மூ ஆக உயர்ந்திருந்த பணவீக்கத்தைஇ கடந்த ஒக்டோபர் மாதத்திற்குள் 1.5மூ ஆகக் குறைக்க முடிந்ததாகவும்இ அன்று பூஜ்ஜியமாகக் குறைந்திருந்த அந்நியச் செலாவணிக் கையிருப்பைஇ 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை உயர்த்துவதற்கு முடிந்தது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இம்முறை வரவு செலவுத் திட்டம்இ நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் மற்றும் தற்போதைய சர்வதேச போக்குகளுக்கு ஏற்ப புதிய பொருளாதார அடித்தளத்தை அமைக்கும் வரவு செலவுத் திட்டமாகும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கஇ தேர்தல் வெற்றியை விட நாட்டின் வெற்றியே தனக்கு முக்கியம் என்றும் வலியுறுத்தினார்.

அரச ஊழியர்களுக்கு தற்போதுள்ள 7இ800 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 2024 ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மேலும் 10இ000 ரூபாவால் உயர்த்தப்படும். -

அரசாங்க ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 2இ500 ரூபாவால் அதிகரிக்கப்படுவதோடுஇ அதன்படி 2024 இல் ஓய்வூதியத்திற்காக 386 பில்லியன் ரூபா ஒதுக்கப்படும். -





தொலைதூரக் கடமையில் இருக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கு தகுந்த மாற்றங்களுடன் உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவை செலுத்துப்படும். -

கடந்த காலங்களில் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட அரச ஊழியர்களின் அனர்த்தக் கடன் வசதிஇ 01-01-2024 முதல் முன்னர் காணப்பட்டவாறே வழங்கப்படும். -

கடந்த வருடங்களில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக செலவிடப்பட்ட தொகை 60 பில்லியன் ரூபாவாக இருந்த போதிலும்இ 2024ஆம் ஆண்டில் அது 183 பில்லியன் ரூபா வரைஇ மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும பலன்களைப் பெறுவதில் தாமதம் ஏற்படும்இ தகுதியுள்ள பயனாளிகளுக்கு கடந்த காலத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை. -

ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோய் உதவித்தொகை 2இ500 ரூபாவினால் அதிகரிக்கப்படும். -

முதியோருக்கான மாதாந்த உதவித்தொகை 3000 ரூபா வரை அதிகரிக்கப்படும். -

புதிய குடும்பங்கள் பயனாளிகள் பட்டியலில் தாமதமின்றி இணைத்துக்கொள்ள 06 மாதங்களுக்கு ஒரு முறைஇ அஸ்வெசும பயனாளிகளின் பட்டியல் மதிப்பாய்வு செய்யப்படும். -

அஸ்வெசும வேலைத்திட்டம்இ ஊனமுற்றோர்கள்இ சிறுநீரக நோயாளிகள் மற்றும் முதியோர்களுக்கான கொடுப்பனவுகளுக்காக 2024 இல் ஒதுக்கப்படும் தொகைஇ 205 பில்லியன் ரூபா வரை அதிகரிக்கப்படும்.

:கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் 4500 ரூபா மாதாந்த கொடுப்பனவை முறையாக தொடர்ந்து வழங்க 10 பில்லியன் ரூபா ஒதுக்கீடு. -

கடந்த காலத்தில் நெருக்கடியை எதிர்கொண்ட சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தும் திட்டத்தை வலுப்படுத்த 30 பில்லியன் ரூபா சலுகைக் கடன் வசதி.

பாரம்பரிய சொத்துக்களை இழந்த விவசாயிகளுக்கு அந்த வயல் நிலங்களின் முழுத் தனியுரிமை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும். -

நகர்ப்புறங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள வீடுகளில் இருந்து வாடகை வசூலிப்பது முற்றிலும் நிறுத்தப்பட்டுஇ அந்த வீடுகளின் உரிமையை அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். -

தோட்டங்களில் வாழும் மக்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணி உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையாக ரூபா 4 பில்லியன் ஒதுக்கீடு.

பிம் சவிய வேலைத்திட்டத்தை விரைவாக நிறைவு செய்வதற்கு தேவையான வசதிகளை வழங்க 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

அபிவிருத்தித் திட்டங்களுக்கு அனுமதி பெறுவதற்கு புதிய பொறிமுறையொன்றை அறிமுகம் செய்யவும்இ புதிய திட்டங்கள் தொடர்பில் மீளாய்வு செய்யவும் அரச குழுவொன்று நிறுவப்படும். அந்த கட்டமைப்புக்கு வெளியே எந்த திட்டத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட மாட்டாது.

2024 வரவு செலவுத்திட்ட மூலதனச் செலவுக்கான ஒதுக்கீடு ரூ.1260 பில்லியனாக அதிகரிப்பு. இது மொத்தத் தேசிய உற்பத்தியில் 4மூ ஆகும்.

பொருளாதார நெருக்கடியால் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட திட்டங்களை நிறைவு செய்ய 55 பில்லியன் ரூபாய் மேலதிக ஒதுக்கீடு.

அபிவிருத்தித் திட்டங்களின் ஊடாக எதிர்பார்க்கும் நோக்கங்களை உரிய காலத்தில் நிறைவு செய்ய 2024 முதல் ஒவ்வொரு அமைச்சிலும் விசேட பிரிவொன்று நிறுவப்படும்.

சேதமடைந்துள்ள கிராமிய வீதிகளைப் புனரமைக்க 10 பில்லியன் ரூபாவும் இயற்கை அனர்த்தங்களால் சேதமடைந்த வீதிகளையும்இ பாலங்களையும் புனரமைக்க 2000 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்படும்.

நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் குடிநீர் பிரச்சனைகள் இருப்பதால்இ பன்முகப்படுத்தப்பட்ட நிதியைப் பயன்படுத்தும் போதும்இ வெளிநாட்டு கடன் உதவிகளைப் பெறும்போதும் நீர் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

கல்வி சீர்திருத்தங்கள் முழுமையான செயல்படுத்தப்படும். அந்த சீர்திருத்தங்கள் மூலம்இ தேசிய உயர்கல்வி பேரவைஇ தேசிய உயர்கல்வி ஆணைக்குழு மற்றும் தேசிய திறன் ஆணைக்குழு என்பன நிறுவப்படும்.

உயர்தரம் சித்தியடைந்த ஒவ்வொரு மாணவருக்கும் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சீதாவக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்இ கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் கீழ் குருநாகல் தொழில்நுட்ப நிறுவனம்இ முகாமைத்துவ தொழில்நுட்ப பல்கலைக்கழகம்இ சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் ஆகிய 04 புதிய பல்கலைக்கழகங்கள் நிறுவப்படும்.

தனியார் உயர்கல்வி நிறுவனங்களை பல்கலைக்கழகங்களாக மாற்றுவதற்கான சட்டவிதிகள் நிறைவேற்றப்படும்.

19 கல்விக் கல்லூரிகளை இணைத்து தேசிய கல்விப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்காக 2024 ஆம் ஆண்டில் 01 பில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

இந்தியாவின் சென்னையில் உள்ள ஐஐடி பல்கலைக்கழகத்தின் வழிகாட்டுதலின் கீழ்இ கண்டி நகரில் ஒரு புதிய தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தல். -

அரச பல்கலைக்கழகங்களை புதிய யுகத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்தும் திட்டமொன்றை செயல்படுத்துவதோடுஇ அது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படும். அதற்காக 2024 ஆம் ஆண்டிற்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. -

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை மற்றும் நோயெதிர்ப்புத் துறைஇ தேசிய ஒவ்வாமை மற்றும் நோயெதிர்ப்பு நிறுவனமாக தரம் உயர்த்தப்படும். அதற்காக 2024இல் 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

உலகில் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு கல்வி நிறுவனத்திற்கும் இந்நாட்டில் பல்கலைக்கழகங்களை நிறுவ அனுமதி வழங்கப்படுவதுடன்இ தனியார் பல்கலைக்கழகங்களை மேற்பார்வை செய்ய வலுவான சட்டவிதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் வட்டியில்லாக் கடன் வசதிகளைஇ தொடர்ந்தும் வழங்குவதோடுஇ வணிக வங்கிகள் மூலம் சலுகைக் கல்விக் கடன் வழங்கும் முறையை அமுல்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுஇ மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டு தேசிய உயர்கல்வி ஆணைக்குழுவை ஸ்தாபித்தல்.

தொழிற்பயிற்சி அதிகார சபைஇ தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை ஆகிய நிறுவனங்களை ஒருங்கிணைத்து தேசிய திறன் விருத்தி ஆணைக்குழுவை நிறுவுதல்.

மத்திய அரசின் கீழ் இயங்கும் தொழில் கல்வி நிறுவனங்கள் மாகாண சபைகளுக்கு மாற்றப்படுவதோடுஇ திறன் விருத்தி மேம்பாட்டுத் துறையை மேம்படுத்தவும் நவீனப்படுத்தவும் மாகாண கல்வி சபைகளை நிறுவுதல்.

தொழில்நுட்ப தொழில்துறை திறன்களை மேம்படுத்த நிதியமொன்றை ஸ்தாபிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடுஇ அதற்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு மேலதிகமாக 2024 ஆம் ஆண்டிற்கு 450 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

# மட்டக்களப்பு விகாரதிபதிக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்காமை ஏமாற்றமளிக்கிறது வடமாகாண மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும்

## ஹரீஸ் எம்.பி வலியுறுத்தல்

(நூருல் ஹுதா உமர்)

மட்டக்களப்பு விகாராதிபதியாக இருக்கும் அம்பிட்டிய தேரர் அவர்கள் தமிழ் மக்களை துண்டுதுண்டாக வெட்ட வேண்டும், கொல்ல வேண்டும் என்று மிகக் கேவலமான முறையில், மிகமோசமாக தமிழ் மக்கள் தொடர்பில் பகிரங்கமாக பேசியிருக்கிறார். இதனை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இவருக்கு எதிராக எந்தவொரு சட்டநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் இலங்கையின் ஒட்டுமொத்த தமிழ் சமூகமும் வேதனையில் ஆழ்ந்துள்ளது. தேரரின் இந்த கருத்தை முஸ்லிம் சமூகமும், சிங்கள சமூகமும் வெட்கக்கேடாக நோக்குகிறது. இவ்வாறான வன்மமான பேச்சுக்கள் தடைசெய்யப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித்தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான றிசாத் பதியூதின் பாராளுமன்றத்தில் முன்வைத்த வடமாகாண மக்கள் தொடர்பிலான பிரேரணையை ஆமோதித்து பேசிய அவர் தொடர்ந்தும் அங்கு பேசுகையில், கடந்த காலங்களிலும் இவ்வாறான வன்மமான பேச்சுக்கள் சிறுபான்மை மக்களுக்கு எதிராக தாண்டவமாடியது. இவற்றை இல்லாமலாக்க பாராளுமன்றம் வன்மமான பேச்சுக்களுக்கு எதிரான சட்டமூலத்தை கொண்டு வரவேண்டும். கடந்தகாலங்களில் அது தொடர்பில் ஆலோசனைகள் இடம்பெற்றிருந்தாலும் அவை இன்னும் அமுலுக்கு வராமல் இருப்பது கவலையளிக்கிறது. அண்மைய மக்கள் எழுச்சிக்கு பின்னர் இந்த நாட்டில் இனவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. எங்கு ஊழல் நடந்தாலும் சரி அவற்றை தட்டிக்கேட்டு இளைஞர்கள் லஞ்சம் ஊழலில்லாத தேசமாக எமது நாட்டை கட்டியெழுப்ப விழைகிறார்கள். ஊழலில்லாத அரசாங்கம் அமைக்க மக்கள் இப்போது தயாராகிவிட்டனர்.

அது போன்றுதான் வடமாகாண முஸ்லிங்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு 33 வருடங்கள் கடந்துள்ள சூழ்நிலையில்



அவர்கள் அங்கிருந்து அன்று வெளியேற்றப்பட்டமையானது மிகப்பெரிய மனித அவலமாக பார்க்கப்படுகிறது. 33 வருடங்கள் கடந்தும் கூட வடமாகாண முஸ்லிங்கள் தமது வாழ்வியல் உரிமைகளை, வீட்டுரிமைகளை, காணியுரிமைகளை, வாக்குரிமை, கல்வியுரிமை, பொருளாதார உரிமைகள் இழந்து தமது தேவைகளுக்காக புத்தளத்திலிருந்து மன்னாருக்கு செல்லும் பாதை உரிமைகளையும் இழந்து நிற்கும் தருவாயில் மனித உரிமைகள் தொடர்பில் இந்த நாட்டில் பேசும் மனித உரிமை ஆர்வலர்களுக்கு சரி இந்த நாட்டை ஆளும் அரசாங்கமும் சரி, பாராளுமன்றமும் சரி இந்த அவலநிலையை போக்க இன்னும் முன்வரவில்லை. இந்த மக்களின் தேவைகளை சரியாக அடையாளம் கண்டு தீர்வை வழங்கவும் அந்த மக்களின் உரிமைகளை மீள பெற்றுக்கொடுக்கவும் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று உடனடியாக நிறுவப்பட வேண்டும்.

குறிப்பிட்ட 03 அல்லது 05 மாதங்களுக்குள் அந்த மக்களின் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டு அவற்றுக்கான தீர்வுகள் வழங்க அவற்றுக்கான நிதியுதவிகளை வழங்கும் பொறுப்பை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தி நீண்டகாலமாக அகதி வாழ்க்கை வாழும் அந்த மக்களுக்கு நியாயம் கிடைக்க வழிசமைக்கப்பட வேண்டும். இன்றும் வடமாகாண மக்கள் புத்தளத்தில் தமது வாக்குரிமையை கூட இழந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மக்களின் பிரச்சினைகள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். இந்த பிரச்சினையை தீர்க்க முன்னாள் அமைச்சர் பெருந்தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப், றிசாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் போன்ற தலைவர்கள் மற்றும் எம்.பிக்கள் பலரும் முயற்சித்திருந்தாலும் அந்த பிரச்சினைகள் இன்னும் தீர்க்கமுடியாமல் இருக்கிறது. இனியும் அவை தொடர இடமளிக்க முடியாது.

இந்த அவலநிலையை போக்க இந்த பாராளுமன்றம் கடமைப்பட்டுள்ளது. சபையில் வீற்றிருக்கும் சிரேஷ்ட அமைச்சர் சுசில் பிரம ஜயந்த இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவையிலும், ஜனாதிபதியிடமும் பேசி இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், வடமாகாண மக்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டது போன்று கிழக்கு மாகாண மக்களும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான தீர்வுத்திட்டமும் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும். - என்றார்

## எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 19

# வாழ்வின் இறுதிப் பயணத்தை நோக்கி

*துன்பத்தைக் கண்டு துவண்டு நின்றால்*
*வாழ்க்கையில் நிலைத்திருக்க முடியாது*
*நிமிர்ந்து நின்று துணிந்து முயற்சித்தால்*
*நினைத்தது யாவும் நம்மை வந்து சேரும்*

வாழ்க்கை ஒரு வரம். 'வாழ நினைத்தால் வாழலாம் வழியா இல்லை பூமியில்' என்பது சினிமாப் பாட பாடலடி. ஒவ்வொரு மனிதனும் ஏதொ ஒரு நோக்கத்தை நிறைவு செய்வதற்காகப் பிறப்பெடுப்பதாகப் மதக் கோட்பாடுகள் கூறுகின்றன. பிள்ளை பிறந்து, கட்டிளமைப் பருவத்தை அடைந்து, இளைஞராகித் திருமணம் செய்து, குழந்தைச் செல்வம் உட்படப் பல செல்வங்ளைப் பெற்றெடுத்து மீண்டும் மீண்டும் ஆசையோடு வாழவே விரும்புகிறான். ஆசைகளைத் துறிந்தவன் ஞானி ஆகிறான். சொத்துச் சுகங்கள், செல்வங்கள் மட்டும்தான் வாழ்க்கை இல்லை. இறுதிக் காலத்தில் எத்தனை சந்தோசத்துடன் வாழ்கிறோம் என்பதைப் பொறுத்து மனித வாழ்க்கையின் வெற்றி தங்கியுள்ளது. வாழும்போது எல்லா ஆசைகளுடனும் சொத்துச் சுகம், பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள் என எதிர்பார்த்து ஒருவகையில் பலருக்கு அடிமைப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆசையை விட்டுக் கொடுக்காது வாழ்ந்து பலர் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். 'அதிகமாக ஆசைப்பட்ட ஆணும், அதிகமாகக் கோபப்பட்ட பெண்ணும் சந்தோசமாக வாழ்ந்த சரித்திரமே இல்லை' என்பார்கள். ஆசை, கோபம், காதல் மூன்றும் உணவில் சேர்க்கப்புடும் உப்புப் போன்றது. 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாவது போல்' வாழ்க்கையும் அவ்வாறு ஆகிவிடக்கூடாது என்பதே பலரின் எதிர்பார்ப்பாகும்.

### நமது பிரச்சினைகளுக்கு யார் காரணம்

ஒருவரின் வாழ்க்கை அவர் நினைப்பது போல் அமைந்து விடுவதில்லை. சாத்திரத்தில் கூறுவது போல் முழுவதும் அமைந்து விடுபதுமில்லை. பல காரியங்கள் எதிர்பார்க்காமலே நடந்துவிடும். பலரின் பலவீனத்தை மூலதனமாக்கிச் சாத்திரிமார் பலரும் குருக்கள்மார் பலரும் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றனர். கிரக மாற்றத்துக்கு ஏற்பத் தமது எதிர்காலம் எவ்வாறு அமையப் போகின்றது என்பதை அறிவதற்காகக் குருக்கள்மாரையும் சாத்திரிமாரையும் நாடுகின்றனர். அவர்களும் காலை வேளையில் தொலைக்காட்சி, வானொலிகளில் கூறுவது போல் கூறிப் பயமுறுத்திப் பல பரிகாரங்களையும் கூறித் தமது பங்கைப் பெற்றுக் கொண்டு அனுப்பி விடுகின்றனர். சாத்திரம் கேட்டவர் பயந்த சுபாவம் கொண்டவராக இருந்தால் அத்தோடு அவர் பலவீனமாகிக் களிப்பும், கோயிலும் பரிகாரமுமாக அலைந்து திரிவார்.

சூரிய மண்டலத்தில் கிரகங்கள் அதன் சுற்றுவட்டப் பாதையில் இயற்கையின் நியதிக்கு ஏற்ப யாவும் காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டிருக்கின்றன. இந்த மாற்றத்தினை முன்பிருந்த குருக்கள்மார், சாத்திரிமாரில் பலர் மிகச் சாதுரியமாகக் கணிப்பிட்டுச் சாத்திரம் கூறினார்கள். இன்று ஒரு சிலரைத் தவிர பலர் பணம் சம்பாதிப்பதையே குறியாகக் கொண்டு செயற்படுகின்றனர். பல குருக்கள்மார் பரிகார பூசை மூலமாகவும் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றனர். 'நமது இன்றைய நிலைக்கு நாமே காரணமாக' இருக்கையில் நாம் தெய்வங்கள், கிரகங்கள்மீது பழியைப் போட்டுக் கொண்டு நமது பலவீனத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இறைவன் விருப்பு வெறுப்புக்கள் அற்றவர். அவர் யாரையும் தண்டிக்கமாட்டார், பழிவாங்கமாட்டார் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். 'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது' 'எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்' என்கிறது பகவத் கீதை.

இயற்கையே எல்லாவற்றையும் தீர்மானித்துக் கொள்ளும்.

நம்மில் பலர் தாய், தந்தையர், சகோதரங்கள், உறவினர்களை நம்புவதையும்விட பூசாரி, சாத்திரிமார், குருக்கள்மார், வைத்தியர்கள், அரசியல்வாதிகள் ஆகியோரை ஏன், எதற்கு என்றில்லாமல் எழுந்தமானமாக நம்புகின்றனர். 'வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்' என்பதையும் மறந்துவிடுகின்றனர். ஒரு சில நோய்கள் பரம்பரைக்கூடாக வந்து சேருகின்றன. பல நோய்களும் பிரச்சினைகளும் நமது நடத்தைக் கோலங்கள் காரணமாக வந்து சேருகின்றன. பல நோய்களுக்கு நமது உணவுப் பழக்க வழக்கமும் உளச் சமநிலை இன்மையும் காரணமாக அமைகின்றன. இவற்றுக்கெல்லாம் நாமே காரணமாக இருந்து கொண்டு இறைவனே அவற்றை எல்லாம் கொடுத்தார் என்பது போல் அவரை நினைத்துக் 'குறைவற்ற செல்வமும் நோய், நொடியற்ற வாழ்க்னையும் கேட்கின்றோம். விருப்பு வெறுப்பற்ற இறைவன் இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களை விரும்பமாட்டார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நமக்குக் கிடைக்கின்ற வெற்றியும் தோல்வியும், துன்ப, துயரங்களும் நம்மால் ஏற்படுத்தப்பட்டவையே தவிர இன்னொருவரால் ஏற்படுத்தப்பட்டலை அல்ல என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும். சிவரகசியத்தில் 'அதர்வ வேதம் உலகின் சமநிலையைப் பேணுவதற்கு உருவாக்கப்பட்டதாக வியாசரின் புத்திரர்கள் நால்வரிடமும் சிவபெருமான் கூறியதாக' ஒரு கதையும் உள்ளது. இதன்படி எது, எவ்வாறு, எப்படி நடக்கின்றன என்பதை இயற்கையே தீர்மானித்துக் கொள்ளும் என்ற உண்மையைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

### நமது இன்றைய நிலைக்கு நாமே காரணம்

பெரும்பாலானோர் வாழ்க்கையில் சிறந்த தீர்மானங்கள் எடுப்பதையும் விடப் பல முறை பிழையான தீர்மானங்களையும் எடுத்து விடுகின்றனர். நல்லது செய்வதாக நினைத்துப் பல பிழையான காரியங்களையும் செய்து விடுகின்றனர். வாழ்க்கைக்கான தீர்மானங்களை எடுக்கும் போது கவனமாக இருத்தல் வேண்டும். பலர் சீதனத்துக்கும் சொத்துச் சுகங்களுக்கும்



ஆசைப்பட்டு சொந்த வாழ்க்கையில் கோட்டைவிட்டு நிற்கின்றனர். பல வீடுகள் சண்டை, சச்சரவுகளும் குழப்பங்களும் நிறைந்த வீடுகளாக இருக்கின்றன. புனிதமான வாழ்க்கையைச் சிந்தித்துச் செயற்படுத்த முடியாமல் பலர் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இலங்கையில் தமிழ் சமூகத்தில் 78 வீதமான குடும்பங்கள் பனிப்போர் நிலையில் இருப்பதாக அண்மைய சமூகவியல் ஆய்வொன்று கூறுகிறது. இந்தப் பனிப்போர் இறைவனா? அல்லது நமது நடத்தையா காரணம் என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும். அதை விடுத்து மற்றவர்மீது பழியைப் போடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பலர் 'பொல்லைக் கொடுத்து அடி வாங்குவது' போல் தினமும் அடி வாங்கிக் கொண்டிருக்கின்றனர். தாம் செய்கின்ற வினைகள் ஒவ்வொன்றுக்கும் பலன் உண்டு என்பதையே நமது முன்னோரும் புராண, இதிகாசங்களும் நீதி நூல்களும் காப்பிய நூல்களும், சித்தாந்த சாத்திரங்களும் உணர்த்திச் சென்றிருக்கின்றன. பஞ்சமா பாவங்களில் ஈடுபட்டவர்கள் தமது இறுதிக் காலத்தில் பட்ட வேதனைகளையும் துன்பங்களையும் கண்டு நெகிழ்ந்தீருக்கிறோம். அவை நமக்கும் கிடைக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது.' பட்டகாலிலே படும்' 'கெட்ட குடியே



**சின்னத்தம்பி குருபரன்**

கெடும்' என்பதற்கேற்ப இயற்கை எல்லாவற்றையும் உணர்திச் செல்லும். இந்த நியதியில் இருந்து யாரும் தப்பி வாழ முடியாது என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். இன்று பலர் நியதிகள், நியமங்களுக்கு ஏற்ப வாழப் பழகிக் கொள்ளாமல் தாம் நினைத்தவாறு மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நமது வாழ்க்கை நமக்குக் கிடைத்த வரம் என்பதை மறந்து பலர் இயற்கைக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அதனால் வாழ்க்கையில் பல பாவங்கள் செய்து கொணடடிருக்கின்றனர்.

*நாப்பிளக்ககப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி*
*நலமொன்றும் அறியாத நாரியரைக் கூடிப்*
*பூப்பிழக்க வருகின்ற புற்றீசல் போலே*
*புலபுலெனக் கலகலெனப்*
*புதல்வர்களைப் பெறுவீர் - அதைக்*
*காப்பதற்கும் வகையறியேன் கைவிடவும் மாட்டேன்*
*காரிழந்த மரநிழலில் சென்று*
*ஆப்பதனை இழுத்த குரங்கதனைப் போலே*
*அகப்பட்டீர் கிடந்துழல அகப்ரே பட்டிணத்தார்.*


என்ற பாடல் வாழ்க்கையின் பல உண்மைத் தத்துவங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. இன்று பலர் ஆப்பிழுத்த குரங்கு போல் வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருப்பதையும் காண முடிகிறது.

### இறுதிப் பயணத்துக்கான இறுதி வாழ்க்கைக்குத் தயாராதல்

தமது வாழ்க்கையில் பலருக்கு மற்றவரை வேதனைப் படுத்தாமல், புண்படுத்தாமல் வாழத் தெரிவதில்லை. இந்தியாவில் ஒரு முறைமைக்கு உட்பட்டு எடுக்கப்படும் திரைப்படங்களும், தொலைக்காட்சிகளில் ஒளி, ஒலிபரப்புவதற்கென தயாரிக்கப்படும் குறுந்தொடர், நெடுந்தொடர்களும் அதனை மேலும் மேலும் ஊக்குவித்துக் கொண்டிருக்கின்றன. இலங்கையின் தொலைக்காட்சி சேவைகளில் முறைமைக்கு உட்பட்டு ஒளிபரப்பப்படும் குறும், நெடுந் தொடர்கள் பாம்பு, பேய், பிசாசு, தெய்வம், பெண்களை வில்லிகளாக்கி ஒரு மாய உலகத்தில் வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றைப் பார்த்து ஆகர்சித்துக் கொண்ட பல குடும்பங்கள் போலியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அதைவிட யூடியூப் சமூக வலைத் தளத்தில் பதிவிடப்பட்டுக் கொண்டிருக்கும் மொழி மாற்றப்பட்ட பல ஒலி, ஒளிப் படங்கள் பலரை மாய உலகில் சஞ்சரிக்க வைத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றின் மொழி பெயர்ப்புக் குரல் பதிவு கேட்பதற்கு அருவருப்பாக இருக்கின்றன. அவற்றைப் பார்த்துப் பார்த்துப் பல குடும்பங்கள் சிதைந்து கொண்டிருக்கின்றன. இன்று சமூக வலைத்தளங்களுக்கூடாகத் தமது வாழ்க்கையைச் சீரழித்துக் கொண்டிருப்பவர்களில் பலர் படித்தவர்களாகவே இருக்கின்றனர்.

படித்த குடும்பங்களில் உள்ளவர்களில் பலர் விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை இல்லாமல் மனவெழுச்சிக்குக் கட்டுப்பட்டு விடாப் பிடியாக நின்று, உலக நியதிகளைப் புறந்தள்ளிக் குடும்ப வாழ்க்கையைத் தொலைத்து நிற்கின்றனர். 'கண் கெட்ட பின்னர்தான் சூரிய நமஸ்காரம்' என்பது போல் என்ன பயன் ஆகப் போகின்றது. பல குடும்பங்களில் கணவன், மனைவி, பிள்ளைகளிடையே ஆரோக்கியமான உறவு பேணப்படுவதில்லை. பலர் சுயபுத்திக்கு இயங்காமல் மற்றவரின் சொல் புத்திக்குக் கட்டுப்பட்டு வாழ்கின்றனர். கணவன் மனைவிக்கு எதிராகப் பிள்ளைகளைத் தூண்டிவிட்டுப் பல விடயங்களைச் சாதித்துக் கொண்டிருக்கிறார். மனைவியும் பல சந்தர்ப்பங்களில் அவ்வாறே நடந்து கொள்கிறார். இருவரும் வேதனைகளையும் வலிகளையும் உருவாக்கிக் கொள்கின்றனர். இதன் விளைவுகள் 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பது போல் இறுதிக்காலத்தில் பிள்ளைகளாலும் ஒதுக்கப்பட்டுத் தனித்திருக்கும் சூழ்நிலையை உருவாக்கி இருக்கின்றன. இதனை இழக்க முடியாத பலவற்றை இழந்து தனிமையில் வாழும் போதுதான் உணருகின்றனர். பலருக்குத் துன்பமும் துயரமும், வலியும், வேதனையும் தனிமையும் நிறைந்த வாழ்க்கை அமையும்போது சுடலை ஞானம் பிறக்கின்றன. எல்லோரும் நம்மைக் கைவிட்டு விட்டார்கள் என்றெல்லாம் உணர்வார்கள். அக்காலத்தில் நம்மைப் பாதுகாப்பதற்கு நாம் நம்பி இருந்த எவரும் முன்வரமாட்டார்கள் என்பதனைக் காலம் உணர்திச் செல்வும் போதுதான் போலியான வாழ்க்கைக்கு ஏமாந்து இழக்கக் கூடாததெல்லாம் இழந்தமை ஞாபகத்துக்குவரும்.

இப்போது இரண்டு விடயங்கள் நம்மை ஞாபகமூட்டுகின்றன. ஒன்று உலகின் இறுதிப் பயணம். உலகின் இறுதிப் பயணம் காலமும் நேரமும் வரும்போது சாத்தி



யப்படும். இரண்டு, உலக வாழ்வின் இறுதிப் பயணம். எப்படிப் பட்டவர்களும் 'முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பல்' ஆவது போல் நமது வாழ்க்கைப் பயணமும் நிறைவடைந்து பஞ்ச பூதங்களுக்குள் அடக்கமாகத்தான் போகின்றன என்பதை மறந்து விடலாகாது. புத்தி தெளிந்த பின், வாழ்க்கையின் சூட்சுமத்தை உணர்ந்த பின் நிறைவான, நிம்மதியான வாழ்க்கை வாழப் பழகிக் கொள்ள வேண்டும். கண்டதனை எல்லாம் அடைய ஆசைப்படாமல் ஆசையை அடக்கி, நமது குடும்ப நிலவரம், கஷ்டம், துன்பம், துயரம், வருமானம் என்பவற்றை உணர்ந்து, பிள்ளைகளுக்கும் புரியவைத்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். 'நமக்கும் கீழே உள்ளவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு' என்ற கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகளைப் புரிந்து கொண்டு வாழப் பழகிக் கொள்ள வேண்டும். முன்பு கூறியது போல் 'அதிகமாக ஆசைப்பட்ட ஆணும், அதிகமாகக் கோபப்பட்ட பெண்ணும் நிம்மதியாக வாழ்ந்தமைக்கான சரித்திரம் இல்லை என்பது சகலருக்குமான பாடமாக அமைகின்றது. வாழும்போது பிறரையும் நேசித்து, முடிந்தவரை உதவி செய்து, உபத்திரம் செய்யாமல், பிறர் பழி கூறாமல் வாழ்ந்த எல்லோரும் இறுதி காலத்தில் சந்தோசமாக வாழ்ந்து இவ்வுலகை விட்டுச் சென்றிருக்கின்றனர்.

பழி, பாவங்களைச் செய்து மற்றவரது வாழ்க்கையைக் கெடுத்து, அவதூறு செய்து, பழி வாங்கி, குடும்பத்தைக் கெடுத்து வாழ்பவர்களின் இறுதி வாழ்க்கை பிறர் பழிப்பதாக அமைந்துவிடுகின்றன. தமது குடும்ப வாழ்க்கையில் வீண் புரளிகளைக் கிழப்பிவிட்டுப் பழி சுமத்தி கட்டுக்கடங்காமல் வாழும் வாழ்க்கையும் இறுதிக் காலத்தில் சபிக்கப்பட்ட வாழ்க்கையாக அமைந்து விடுகின்றன. மனதைக் கட்டுப்படுத்தி, கோபம், ஆசை ஆகியவற்றை அடக்கி வாழ்ந்த வாழ்க்கை இறுதி காலத்தில் சந்தோசத்தைப் பெற்றுக் கொடுத்திருப்பதையும்



நாம் கண்டிருக்கிறோம். கணவனும் மனைவியும் எந்த வேளையிலும் பதட்டத்துடன் நெருக்கீடுகளுக்கு உட்பட்டு வாழ்பவர்கள் சந்தோசமாக வாழ முடியாது. மற்றவரை மதிக்காமல், அன்பு செலுத்தாமல் வாழ்ந்தவர்களும் இறுதி காலத்தில் நிம்மதி இழந்து வாழ்ந்திருக்கின்றனர். அன்பு, கருணை, பாசம், நேசம், பரிவு, விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு, மற்றவர்களிடத்தில் மதிப்பு, மரியாதை செலுத்தி வாழ்ந்தவர்கள் பலரோடு சேர்ந்திருந்து மகிழ்ச்சியாக வாழ்ந்து இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்றிருக்கின்றனர். அவர்கள் இன்றும் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அன்பான வாழ்க்கை என்றும் மன நிறைவைப் பெற்றுத்தரும். வாழ்க்கையின் இறுதி இலக்கு நல்ல மரணம் என்றால் அதற்கேற்றவாறு வாழ்ந்து காட்ட வேண்டும்.

பலரின் வாழ்க்கை பலருக்குப் பாடமாக அமைகின்றன. பலரின் வாழ்க்கை வெறுப்பையும் அருவருப்பையும் ஏற்படுத்தி இருக்கின்றன. இவ்வுலகில் படைக்கப்பட்ட எல்லாவற்றுக்கும் இறுதி முடிவென்பது உள்ளது. அதேபோல் உயிரினங்கள் எல்லாவற்றுக்கும் இறப்பு என்ற முடிந்த முடிவொன்று நிச்சயிக்கப் பட்டிருக்கிறது. இதிலிருந்து யாரும் விடுபட முடியாது. ஆறறிவுக்குக் கீழ்பட்ட சகலமும் இயற்கை நியதிப்படி ஓர் ஒழுங்கில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்த ஒழுங்கின்படியெ அவற்றின் வாழ்க்கை வட்டமும் ஒழங்குபடுத்தப் பட்டிருக்கின்றன. ஆனால் மனிதன் ஆறாவது அறிவாகிய பகுத்தறிவைப் பயன்படுத்திச் சிந்தித்துச் செயலாற்றிக் கொண்டிருக்கிறான். மனிதன் தெரிந்தே தவறுகளையும் குற்றங்களையும் பாவங்களையும் செய்கிறான். குற்றமிழைத்தவர்களுக்குத் திருந்துவதற்கான பல சந்தர்ப்பங்கள் நேர்ந்த போதிலும் திருந்திக் கொள்ளாமல் மேலும் மேலும் பாவங்களைச் செய்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. அத்தகையவர்களின் இறுதிக் காலம் மிக மோசமானதாக அமைந்துவிடுகின்றன. மனிதனாய்ப் பிறந்த யாவரும் இறுதிக் காலத்தில் சந்தோசமாக வாழ்வதற்குரிய திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும். அந்த வாழ்க்கை நமக்குப் பேரும் புகழையும் இறந்த பின்னரும் வாழும் சரித்திரத்தையும் ஏற்படுத்துவதாக அமைதல் வேண்டும்.

**மனிதன் போன பாதை தொடரும்..**

# இன்று கந்தசஷ்டி விரதம் ஆரம்பம்



முருகப் பெருமானை நினைத்து அவர் அருள் பெற வழிபடுகின்ற விரதங்களில் கந்த சஷ்டி விரதம் முக்கியமானதாகும்.

முருகனுடைய விரதங்களுள் கந்த சஷ்டி விரதம், கார்த்திகை விரதம், வெள்ளிக் கிழமை விரதம் ஆகிய மூன்றும் பிரதான மான வையாகும்.

கந்தசஷ்டி விரதம் இன்று 14 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது.

18 ஆம் தேதி சூரசம்கார நிகழ்ச்சி இடம் பெற்று 19ஆம் தேதி திருக்கல்யாண நிகழ்வோடு விரதம் நிறைவு பெறுகிறது.

கந்தப்பெருமான் சூரனை சங்கரித்த பெருமையைக் கொண்டாடுவதே ஸ்கந்தஷஷ்டி விரத விழாவாகும். ஐப்பசி மாதத்தில் வரும் வளர் பிறை சஷ்டி அன்று தான் முருகப் பெருமான் சூரபத்மனை அழித்த நாள்.

முருகன் கோயில் கொண்டுள்ள எல்லா ஆலயங்களிலுமே ஸ்கந்தசஷ்டி விரதம் மிகச் சிறப்பாக ஆறு நாட்கள் அனுஷ்டிக்கப் படுகின்றது.

### கந்தசஷ்டி விரத மகிமை:

கலியுக கடவுளாக கந்த பெருமான் போற்றப்படுகின்றார். மனித மனம் விரதத்தின் போது தனித்து விழித்து பசித்து, இருந்து ஆறு வகை அசுத்தங்களையும் அகற்றி தூய் மையை அடைகின்றது. தூய உள்ளம், களங்க மற்ற அன்பு, கனிவான உறவு என்பவற்றிற்கு அத்திவாரமாக கந்தசஷ்டி விரதம் அமைகிறது.

கொடுங் கோலாட்சி செலுத்திய ஆணவத் தின் வடிவமாகிய சூரனையும், கன்மத்தின் வடிவ மாகிய சிங்கனையும், மாயா மலத்தின் வடிவமாகிய தாரகனையும், அசுர சக்திகளை யெல் லாம் கலியுக வரதனான கந்தப் பெருமான் அழித்து, நீங்காத சக்தியை நிலை நாட்டிய உன்னத நாளே கந்த சஷ்டியாகும்.

### கந்தசஷ்டி விரத எவ்வாறு அனுஷ்ட்டிப்பது?

ஐப்பசித் திங்கள் சதுர்த்தசித் திதியில் வளர் பிறை பிரதமை முதல் சஷ்டி வரை ஆறு நாட்களும் கந்தப் பெருமானை நினைத்து வழிபட்டு விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

உபவாசம் இருப்பது அதி உத்தமம் எனக் கருத படுகின்றது. மிளகை விழுங்கி பழம் மட்டும் சாப்பிட்டு, தீர்த்தம் குடித்து இளநீர் குடித்து ஒரு நேர உணவு மட்டும் உண்டு அவரவர் தேக நிலைக்கேற்ப கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்க ப்படுகின்றது.

ஆறாவது நாளான கந்தசஷ்டியன்று பூரண உபவாசம் இருத்தல் வேண்டும். விரதம் ஆரம்பமான தினத்தில் ஆலயம் சென்று சங்கல்ப்பம் செய்து காப்புக் கட்டி விரதத்தைத் தொடங்குவார்கள். கந்த சஷ்டி விரதம் தொடர்ந்து ஆறு வருடங்களும், கார்த்திகை விரதம் பன்னி ரெண்டு வருடங்களும் வெள்ளிக்கிழமை விரதம் மூன்று வருடங் களும் அனுஷ்டிக்கப்ப டுகின்றது.

அசுர சக்திகளின் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்களை மட்டுமன்றி ஆறுவகை.எதிரிகளான காமம் கோபம் பேராசை செருக்கு மயக்கம் பெருமை ஆகிய வகைகளை அழித்து முற்றுணர்வு, வரம்பி லாற்றல், தன் வயமு டை மை, வரம்பின்மை, இயற்கையுணர்வு பேரருள் ஆகிய தேவ குணங்களை நிலை நாட்டியதால் கந்த சஷ்டி விரதமே பெருவிழாவாக எடுக்கப் படுகின்றது.

ஏனைய விரத அனுட்டானங்களை போலன்றி கந்த சஷ்டி விரதானுஷ்டானத்தை பெருவாரியான ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் கடைப்பிடிக்கின்றா ர்கள். மாணவர்கள் படிப்பிற்கும், குடும்பப் பெண்கள் குடும்ப நன்மைக்கும், கன்னிப் பெண்கள் நல்ல கணவனை வாழக்கைத்துணையாக அடைய வேண்டியும், குழந் தை இல்லாதோர் குழந்தை வேண்டியும் விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

### ஞான சக்திக்கும் அசுர சக்திக்கும் இடையேயான போர்:

சூரன், சிங்கன், தாரகன் முதலிய அசுரர்கள் நெடுங்காலமாக தேவர், மனிதர் யாவரையும் துன்புறுத்தி அழித்து வந்தனர். பரமசிவன் இதற்கொரு முடிவு காணும் நோக்கில், தனது சக்தியையே முருகப் பெருமானாகப் பிறப்பித்தார்.

அந்த முருகப் பெருமான் இந்த சூரபது மாதி அசுரர்களுடன் ஆறு நாட்கள் போரிட்டு வென்றார். இந்த அருட் பெருங்கருணைச் செயலை வியந்து இப்போர் நிகழ்ந்த காலமாகிய ஐப்பசி மாத வளர்பிறை முதல் ஆறு நாட்களையும் விரத நாட்களாகக் கொண்டு முனிவரும் தேவரும் நோற்று வந்தனர். இதுவே கந்த சஷ்டி என்ற பேரில் பூலோக மாந்தரும் அனுஷ்டிக்கக் கிடைத்தது.

### கந்தசஷ்டி விரத பயன்கள்:

இவ்விரதத்தின் போது, தினமும் கந்த சஷ்டி கவசம், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருப்புகழ், கச்சியப்ப சுவாமிகளின் கந்த புராணம் ஆகியவற்றைப் பாராயணம் செய்வ தால், என்னவென்று சொல்ல முடியாத சாந்தி, மனஅமைதி, நிலவும். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்திருப்பர்.

சஷ்டி விரத ஆறு நாட்களும் கந்தப் பெரு மான் எழுந்தருளியுள்ள ஆலயங்களில் எல்லாம் பூரண கும்பம் வைத்து விஷேட அபிஷேகமும், சண்முகார்ச்சனையும், கந்த புராணப்படிப்பும் நடைபெறும்.

விரதம் முடிவுற்ற அன்று முருகன் ஆலயத் தில் சூரன் போர் நடைபெற்று, மறுநாள் விரதம் அனுஷ்டித்த அனைவரும் விரத பூசையை பாரணை செய்து நிறைவு செய்கின்றனர். பாறணை பண்ணும் அன்று ஆறு பேருக்கு அன்னதானம் வழங்கி உட்கொள்ள வேண்டும்

அத்தகைய மகிமை வாய்ந்த கந்த சஷ்டி விரதத்தை அனுஷ்டித்து நாமும் பயன்பெறுவோமாக.

**விபுலமாமணி**
**வி.ரி.சகாதேவராஜா**
**காரைதீவு நிருபர்**



# பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டிலான நீச்சல் மற்றும் உயிர் காப்பு பயிற்சி நெறி வகுப்பு





**(எம்.ஏ.ஏ.அக்தார்)**

பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டில், இலங்கை உயிர் காப்பு சங்கம் மற்றும் கல்குடா சுழியோடிகள் அமைப்பு என்பன இணைந்து நடாத்திய இலவசமான நீச்சல் பயிற்சி மற்றும் உயிர் காப்பு சான்றிதழ் பயிற்சி நெறி ஆரம்ப வகுப்பு பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலையில் நடைபெற்றது.

பாலமுனை இளைஞர்கள் சபையின் தலைவர் ஏ.எல்.எம். சீத் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில், எமது அமைப்பின் ஆலோசகரும் சட்ட வைத்தியருமான எஸ்.எம்.றிபாஸ்த்தின் அவர்களின் அழைப்பில் மூவ் கல்குடா சுழியோடிகள் அமைப்பின் பிரதம பயிற்றுவிப்பாளரும் விசேட சுழியோடியும் உயிர்காப்பாளருமான கபீர் இப்றாஹிம், மூவ் கல்குடா சுழியோடிகள் அமைப்பின் உதவி பயிற்றுவிப்பாளரும் ஒஷியன் யுனிவர்சிட்டி மாணவன் ஏ.எம்.எம்.றிஸ்வான், உதவி பயிற்றுவிப்பாளர் எம்.எஸ்.எம்.சஜ்ஜாத் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி வகுப்பினை ஆரம்பித்து வைத்தனர்.

மேலும் இந் நிகழ்வில் மின்ஹாஜ் தேசிய பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் ஐ.எல்.எம்.பாயிஸ், கைமா விளையாட்டுக் கழக தலைவர் ஏ.ஆர்.சபீலூர் றசாத், மாவட்ட இளைஞர் சம்மேளனத் தலைவர் ஏ.ஆர்.றிப்கான், அமைப்பாளர் எம்.ஏ.சிபான், உபதலைவர்களான யூ.எல்..ஹஸ்ஸாலி, ஐ.எம்.. ஹம்தான் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன் தொடர்ச்சியாக நீச்சல் பயிற்சிகள் அக்கரைப்பற்று மத்திய கல்லூரின் நீச்சல் தடாகத்தில் தொடராக இடம்பெறவுள்ளது.

# மட்டக்களப்பில் சரக்கு ரயில் பெட்டியை உடைத்து 750 பக்கற் திரிபோச மா பக்கற்றுக்களை திருடிய இருவர் கைது

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ரயில் பெட்டியை உடைத்து 750 பக்கற் திருபோச மா பக்கற்றுக்களை திருடிச் சென்ற இருவரை ஞாயிற்றுக்கிழமை (12) கைது செய்துள்ளதாக மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு பிராந்திய சுகாரா திணைக்களத்திற்கு சரக்கு ரயிலில் அனுப்பிவைக்கப்பட்ட சரக்கு பெட்டி மட்டக்களப்பு ரயில் நிலையத்தை வந்தடைந்து அங்கு நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 5 ம் திகதி அந்த ரயில் பெட்டியை உடைத்து அங்கிருந்து 750 கிராம் கொண்ட 750 பக்கற் திரிபோச மா பக்கற்றுக்கள் திருட்டுப் போயிருந்த நிலையில் 7ம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து பொலிசாரின் விசாரணையில் திருடப்பட்ட திரிபோச மா பக்கற்றுக்களை இருவர் விற்பனை செய்துவருவதாக கிடைத்த தகவலினையடுத்து மட்டு தலைமையக பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜி.எம்.எஸ்.கயநாயக்கா தலைமையிலான பொலிசார் சம்பவதினமான நேற்று இரவு கருவப்பங்கோணி மற்றும் கூழாவடி பிரதேசத்தைச் சேர்ந்த 3, 30 வயதுடைய இருவரை அவர்களது வீடுகளில் வைத்து கைது செய்ததுடன் திருடப்பட்ட சிறியளவிலான திரிபோசமா பக்கற்றுக்களை மீட்டுள்ளனர்.

# சம்மாந்துறை பிரதேச வர்த்தகர்களுக்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை ஒழுங்கு செய்திருந்த விழிப்புணர்வு கருத்தரங்கு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட செயலகம் சம்மாந்துறை பிரதேச சபையுடன் இணைந்து சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள வர்த்தகர்களுக்கு ஒழுங்கு செய்திருந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு பிரதேச சபையின் பிரதான கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி சாலிந்த பண்டார மற்றும் புலன் விசாரணை அதிகாரிகளான முஹம்மட் ஸாஜீத் ஸமான், எம்.எச்.எம்.றிபாஜ் ஆகியோர் பிரதான வளவாளராக கலந்து கொண்டு, வியாபார செயற்பாடுகளின் போது வர்த்தகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட, ஒழுங்குகள், விதிமுறைகள் மற்றும் நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள அரசாங்க கட்டுபாட்டு விலைகள் குறித்து தெளிவுபடுத்தினார்.



இதன்போது வர்த்தகர்களினால் எழுப்பப்பட்ட வினாக்கள் மற்றும் சந்தேகங்களுக்கும் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், நுகர்வோர் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரி எம்.எம் நியாஸ், வர்த்தகர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# காரைதீவு விளையாட்டுக்கழகத்தின் 40 வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தீபாவளி பூப்பந்தாட்ட போட்டி



**(வி.ரி. சகாதேவராஜா)**

தீபத்திருநாளை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக்கழகத்தின் 40 வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டும் நடத்திய மாபெரும் பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கழகத் தலைவர் தம்பிராசா தவக்குமார் தலைமையில், விபுலானந்தா மத்திய கல்லூரி பூப்பந்தாட்ட அரங்கில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில்,

பிரதம அதிதியாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட நிறைவேற்று பொறியியலாளரான பட்டய பொறியாளர் எந்திரி அருமைநாயகம் லிங்கேஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக, கழகத்தின் போசகர்களான காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், உத்தரவு பெற்ற நில அளவையாளர் வே.இராஜேந்திரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு வெற்றி கிண்ணங்கள் வழங்கி வைக்கப்பட்டன .

கழகச் செயலாளர் எஸ் .கிரிசாந்த் நிகழ்ச்சிகளை தொகுத்து நன்றியுரை வழங்கினார்.

சுற்றுப்போட்டிக்கான அனுசரணையை பட்டயப் பொறியியலாளர் ஏ.லிங்கேஸ்வரன் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.



# இவ்வாண்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகளை வெளியேற்றிய ஐ.டி.எம்.என்.சி. சர்வதேச கல்விநிறுவனம்













இலங்கையில் முன்னணி தனியார் சர்வதேச கல்வி நிறுவனமாக திகழும் ஐ டி எம் என் சி சர்வதேச கல்விநிறுவனத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழா நேற்றைய தினம்(11) பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேசமாநாட்டு மண்டபத்தில் இன் நிறுவனத்தின் தவிசாளர் கலாநிதி.ஜனகன் விநாயகமூர்த்தி அவர்களின் தலைமையில் மிக விமர்சையாக இடம் பெற்றது.

இப் பட்டமளிப்பு விழாவில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கலாநிதி, முதுகலை,இளங்கலை, உயர்டிப்ளோமா ஆகிய பட்டங்களை பெற்றுக் கொண்டதுடன் இவ் விழாவுக்கு பிரதம அதிதியாக நீதி அமைச்சர்கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ அவர்களும் கௌரவ அதிதிகளாக அமைச்சர் டிராட் அலஸ், அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், அனுராதா ஜெயரட்ண ஆகியோர்கலந்துகொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் ஐ டி எம் என் சி சர்வதேச கல்வி நிறுவனத்தின் பிரத்தனிய பல்கலைக்கழகமானBuckinghamshire New University இன் முக்கிய பிரதிநிதிகளாகிய கலாதிதி சேரா வில்லியம், மைக் மைக்மைக்டோமற் மற்றும் மற்றும் அலன் கிளார்க்,தூதுவரும் வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளருமான அமீர் அஜ்வாத் ஆகியோர் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கிவைத்தனர்.

இப்பட்டமளிப்பு விழா காலை மற்றும் மாலை நேர நிகழ்வுகளாக இரண்டு பகுதிகளாக இடம்பெற்றது.

பிரத்தானியாவின் Buckinghamshire New University மற்றும் EdHat International ஆகிய சர்வதேசநிறுவனங்களின் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக ஐ



டி எம் என் சி சர்வதேச கல்வி நிறுவனம்நீண்ட காலமாக செயற்படுகின்றது. இன்று இலங்கையில் சட்டக் கல்வித்துறையில் பல சாதனைகளைபடைத்து முன்னணியில் திகழும் இந்த நிறுவனம் இப்பட்டமளிப்பு விழாவில் தொழில்நுட்ப்பக்கல்வி, முகாமைத்துவக்கல்வி, ஆசிரியர்கல்வி, மற்றும் சட்டக்கல்வியில் பட்டங்களை வழங்கிவைத்தது.

40 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை கல்வித்துறையியில் நிலைத்திற்கும் ஐ டி எம் என் சி நிறுவனம் சர்வதேசதரத்தில் இலங்கை பல்கலைக்கழக மானியத்தின் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வியினை வழங்கிவருகின்றது.


MALAYSIAN UNIVERSAL COLLEGE
Malaysia / Sri Lanka Branches
PLANNING TO MOVE ABROAD TO WORK AS MONTESSORI TEACHER, PRIMARY TEACHER ?
Learn the International methodology of Teaching
2023-2024
ADMISSION
OPEN
Teaching courses
IELTS courses ( British council)
English Diploma
Child psychology
Advance graduates
Contact : 0770 857 994


சுபீட்சம்
மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com



# சவூதியில் அவசர அரபு லீக் மாநாடு: இஸ்ரேல் போரை நிறுத்த வழிகோலுமா?

**(சனியன்று (11/11/23) முடிவுற்ற அரபு லீக் மாநாட்டில் வெளியிடப்பட்ட இறுதிப் பிரகடனத்தில், இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை நிறுத்த ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில் ஒரு தீர்க்கமான மற்றும் கட்டுப்பாடான தீர்மானத்தை அறிவிக்க வேண்டும் என்று கோரியுள்ளது)**

ஐங்கரன் விக்கினேஸ்வரா

அரபு லீக் பிரதிநிதிகள் இஸ்ரேலுக்கு கடுமையான நிபந்தனைகளை விதிக்காமல், இறுதி அறிக்கையின் மீது ஒரு பொது உடன்பாட்டை எட்டத் தவறினர். இதற்கு முக்கிய காரணம் அரபு நாடுகளின் பிராந்திய விரிசல்களும், அமெரிக்க சார்பு நிலைப்பாடே ஆகும்.

## அரபு லீக் இறுதிப் பிரகடனம்:

ஆயினும் ஒன்றிணைந்த முடிவுகள் சில எடுக்கப்பட்டதாக அரபு இராஜதந்திரிகள் தெரிவித்தனர். அவற்றுள் இஸ்ரேலுக்கு ஆயுத விற்பனையை மற்ற நாடுகள் நிறுத்த வேண்டும் என்றும், அதே நேரத்தில், பல நாடுகள் இஸ்ரேலுக்கும் எண்ணெய் விநியோகத்தை நிறுத்த வேண்டும் என்றும் கோரினர்,

சில அரபு லீக் நாடுகள் இஸ்ரேலுடன் கொண்டுள்ள பொருளாதார மற்றும் இராஜதந்திர உறவுகளை துண்டிப்பதன் மூலம் போருக்கு பதிலடி கொடுக்கும் முயற்சி வெற்றி அளிக்கும் எனவும், அரபு நாடுகளில் உள்ள தளங்களில் இருந்து இஸ்ரேலுக்கு அமெரிக்க உபகரணங்களை மாற்றுவதை தடுக்க மிகவும் கடுமையாக இருக்க இந்த மாநாட்டு தீர்மானம் அழைப்பு விடுத்திருக்கிறது.

அதேவேளை இஸ்ரேலுடனான அனைத்து இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளையும் முடக்கவும், 1972 போல எண்ணெய் தடையை இஸ்ரேல் மீது அழுத்தம் கொடுக்கவும் இந்த மாநாட்டில் தீர்மானம் விடுத்திருக்கிறது.

அரபு நாடுகளின் வான்வெளியைப் பயன்படுத்தி இஸ்ரேலுக்குச் செல்லும் விமானங்களைத் தடுத்து, போர்நிறுத்தத்திற்கு மேற்கத்திய நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க வலியுறுத்து உள்ளது. அத்துடன் இஸ்ரேல் அணு ஆயுதக் களஞ்சியத்தை பராமரித்து வருவதாக வெளிநாட்டு மதிப்பீடுகள் கூறுகின்றன. ஆனால் இஸ்ரேல் அணு ஆயுதங்களை வைத்திருப்பதை முறையாக ஒப்புக் கொள்ளவில்லை, அதற்கு பதிலாக 'அணு தெளிவின்மை' கொள்கையைப் பேணுகிறது என கூறுகிறது.

பாலஸ்தீன போரில் இஸ்ரேல் அதன் குற்றங்களுக்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும், இஸ்ரேலின் கைகளில் உள்ள அணு ஆயுதங்களை அம்பலப்படுத்த வேண்டும் என்றும் அரபு லீக் வலியுறுத்து உள்ளது.

## ஈரான் - சவூதி நட்புறவு;

ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, மார்ச் மாதம் இரு நாடுகளும் உறவுகளை சீர்படுத்திய பின்னர் சவுதி அரேபியாவிற்கு தனது முதல் பயணத்தை அரபு லீக் மாநாட்டுக்காக வந்தார்.

காசாவில் இஸ்ரேலிய இராணுவம் அதன் நடத்தைக்காக இஸ்லாமிய நாடுகள் 'பயங்கரவாத அமைப்பாக' இஸ்ரேலை அறிவிக்க வேண்டும் என்று ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி கோரினார். இந்த மோதலுக்கு ஒரே தீர்வு பாலஸ்தீனிய அரசு 'நதியில் இருந்து கடல் வரை' அதாவது இஸ்ரேல் அரசை அகற்றுவது என்று ஈரானிய ஜனாதிபதி ரைசி உச்சிமாநாட்டில் கடுந்தொனியில் கூறினார்.



பாலஸ்தீனப் பகுதிகளில் என்ன நடக்கிறது என்பது குறித்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் தீர்க்கமான முடிவை எடுக்க விரும்புகிறோம். பொது மக்களைக் கொல்வதும், மருத்துவமனைகள் மீது குண்டு வீசுவதும் காசாவில் இஸ்ரேலிய குற்றங்களின் வெளிப்பாடுகள். இன்று, ஒவ்வொருவரும் தாங்கள் எந்தப் பக்கம் நிற்கிறார்கள் என்பதைத் தீர்மானிக்க வேண்டும், என்று ஈரானிய ஜனாதிபதி வேண்டினார்.

அத்துடன் பாலஸ்தீனியர்களுக்கு ஆயுத உதவி வழங்கவும் ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி அழைப்பு விடுத்தார்.

## இஸ்ரேலுக்கு பொருளாதார தடை:

இஸ்ரேலுக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் மற்றும் ஆற்றல் புறக்கணிப்பும், இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவிற்கு எதிராக ஹேக்கில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட வேண்டும் என அரபு லீக் மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

இஸ்ரேலின் அணுசக்தி வளர்ச்சிக்கு எதிராகவும் அல்ஜீரியா மற்றும் லெபனான் உட்பட சில நாடுகள் வலியுறுத்தின. இஸ்ரேலுக்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் எண்ணெய் விநியோகத்தை நிறுத்தவும் கோரினர். சில அரபு லீக் நாடுகள் இஸ்ரேலுடன் கொண்டுள்ள பொருளாதார மற்றும் இராஜதந்திர உறவுகளை துண்டிப்பதன் மூலம் காசாவில் ஏற்பட்ட பேரழிவிற்கு பதிலடி கொடுக்க முன்மொழியப்பட்டது.

## சவூதி தலைமையில் அரபு லீக் மாநாடு:

காசாவில் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு பற்றி கலந்துரையாடும் நோக்கோடு அரபு நாட்டுத் தலைவர்கள் உச்சிமாநாட்டின் அவசர அமர்வொன்று நவம்பர் 11ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. அரபு லீக்கின் இந்த 32வது அமர்வு சவூதி அரேபியாவின் தலைமையிலேயே நடைபெற்றது.

சவூதி அரேபியா வாஷிங்டனுடனான நெருக்கமான உறவுகளை பேணுவதால், அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளுடன் போர் நிறுத்த பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் சவூதி அரேபியா தெரிவித்தது.

காசா பகுதியில் இஸ்ரேல் தொடர்ந்து வான்வழி மற்றும் தரைவழித் தாக்குதல்களை நடத்தி வருகிறது. அகதிகள் முகாம், மருத்துவமனைகள் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி பல ஆயிரக்கணக்கான குழந்தைகள், பெண்கள், முதியோர்களை கொன்று குவித்து வருகிறது.

பாலஸ்தீன் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும் என அரபு நாடுகள் உட்பட பல நாடுகள், ஐநா அமைப்பு, பல்வேறு மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன. இஸ்ரேல் அதை காதில் வாங்காமல் தாக்குதல்களை தொடர்ந்து வருகிறது.

இந்த நிலையில் போர் தொடர்பாக அரபு லீக் அவசர மாநாடு சவூதி அரேபியா தலைநகர் ரியாத்தில் நடைபெற்றது. கடந்த அக்டோபர் மாதம் 22 ஆம் தேதி எகிப்து தலைநகர் கெய்ரோவில் அரபு லீக் உச்சி மாநாடு முன்பு நடைபெற்றது.

## கெய்ரோ மாநாட்டின் பின் மீண்டும் !

கெய்ரோ மாநாடு நடைபெற்றதை தொடர்ந்து 20 நாட்களுக்குப் பிறகு அரபு லீக் நாடுகள் மீண்டும் ஒன்றிணைவது குறிப்பிடத்தக்க விடயமாகும். மீண்டும் அரபு லீக் நாடுகள் இந்த அவசர கூட்டத்தில் கூட்டி இருப்பது சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்பட்டது.

கெய்ரோவில் நடைபெற்ற உச்சி மாநாட்டின்போது இஸ்ரேல்-ஹமாஸ் மோதல் நிலவரம் பரபரப்பான விவாதமாக இருந்தது. ஈராக், சைப்ரஸ், ஜோர்டான், சவூதி அரேபியா, பஹ்ரைன், குவைத் மற்றும் கத்தார் ஆகிய நாடுகள் பங்கேற்றன. காசா பகுதியில் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு பற்றி கலந்துரையாடும் நோக்கோடு ஜேர்மனி மற்றும் ஜப்பானின் பிரதிநிதிகளுடன் ஐ.நா பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். கிரீஸ் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் பாலஸ்தீனியர்களின் பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

சவூதி இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடனான தனது உரையாடலில், பாலஸ்தீன மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் மற்றும் அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணும் வகையிலும் இராஜதந்திர முயற்சிகள் தொடர கோரியதாக இந்த மாநாட்டில் தெரிவித்தார்.

## சவூதி இராஜதந்திர முயற்சிகள்:

போரை நிறுத்த பல வழிகளில் சவூதி முயற்சிகளை மேற் கொண்டுள்ளதாகவும், முன்னரே மேற் கொண்ட இராஜதந்திர முயற்சிகள் தொடர்பிலேயே தொடர்ந்தும் கரிசனையோடு இருப்பதாகவும் சவூதி அறிவித்தது.







சவூதி அரேபியாவின் பாதுகாப்பு அமைச்சர் காலித் பின் சல்மான், உடனடி போர் நிறுத்தத்தை கோருவதற்காக திங்கட்கிழமையன்று அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

சவுதி இளவரசர் முகமது பின் சல்மான், பாலஸ்தீன மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு ஆக்கிரமிப்பு இஸ்ரேலிய அதிகாரிகளே பொறுப்பு. ஆக்கிரமிப்பு, முற்றுகை மற்றும் குடியேற்றங்களை முடிவுக்குக் கொண்டுவருவதே இப்பிராந்தியத்தில் பாதுகாப்பு, அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு உத்தரவாதம் அளிக்க ஒரே வழி என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம் எனக் கூறினார்.

காசா பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய மனிதாபிமான உதவிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. பாலஸ்தீன் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையிலான ராஜாங்க முயற்சிகளை சவூதி அரேபியா தொடர்ந்து மேற்கொண்டு உள்ளதாகவும், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் சவூதி அரேபியா தெரிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

பல்லாயிரம் உயிர்களை காவு வாங்கியிருக்கும் இப்போருக்கான ஒரு முடிவைப் பெறும் முயற்சியாக இம்மாநாடு அமையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் அரபு லீக் பிரதிநிதிகள் இஸ்ரேலுக்கு கடுமையான நிபந்தனைகளை விதிக்காமல், இறுதி அறிக்கையின் மீது ஒரு பொது உடன்பாட்டை எட்டத் தவறினர். இதற்கு முக்கிய காரணம் அரபு நாடுகளின் பிராந்திய விரிசல்களும், ஒற்றுமையின்மையும் முக்கிய காரணமாகும்.


MALAYSIAN UNIVERSAL COLLEGE
BECOME AN INTERNATIONAL QUALIFIED OBTAIN AN UK, USA QUALIFICATION FROM MUC
Level 4 & 5 Advance Diploma
Diploma level
Level 5 HND
Degree
UGC recognized
Migration purposes
2023-2024
ADMISSION
OPEN
Contact : 0770 857 994


MALAYSIAN UNIVERSAL COLLEGE
BECOME AN INTERNATIONAL QUALIFIED OBTAIN AN UK, USA QUALIFICATION FROM MUC
HND in Teacher Training
HND in bridal & makeup
HND in mehandhi ART
HND in early childhood Education
HND in cake and decorating
HND in baking
HND in psychology
All country attestation is done for work permit and migration purposes
100% we guarantee ur job in any country
We give the international syllabus with theory and practical methodology in your comfortable language
2023-2024
ADMISSION
OPEN
Contact : 0770 857 994